பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

29 08 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- பாரிஸ் பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் இந்திய வீரர்களுக்கு 140 கோடி மக்களும் உறுதுணையாக உள்ளனர் என பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- நாடு முழுவதும் புதிய பண்பலை வானொலி அலைவரிசைகளை தொடங்குவதற்கான ஏலத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது முக்கியமான நடவடிக்கை என மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் மின்சாரத் துறை சார்பில் நடைபெற்று வரும் சீரமைப்புப் பணிகளில் 88 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.
- சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்கில் திமுக மக்களவை உறுப்பினர் திரு ஜெகத்ரட்சகனுக்கு 908 கோடி ரூபாயை அபராதமாக அமலாக்கத்துறை விதித்துள்ளது.
- சென்னையில் வரும் 31-ஆம் தொடங்கவுள்ள ஃபார்முலா -4 கார் பந்தயத்திற்கான போட்டி அட்டவணையை மாநில அரசு வெளியிட்டுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பாரிஸ் பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் நேற்று இரவு தொடங்கியது.

இந்த போட்டிகளில் பங்கேற்றுள்ள இந்திய வீரர்களுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இப்போட்டியில் பங்கேற்றுள்ள இந்திய வீரர்களுக்கு 140 கோடி மக்களும் உறுதுணையாக உள்ளனர் என கூறியுள்ளார்.

இந்த வீரர்களின் மன உறுதி ஒட்டுமொத்த தேசத்திற்கும் உத்வேகம் அளிப்பதாக திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளர்.

பாரிஸில் இந்திய நேரடிப்படி நேற்று இரவு மணி 11-30-க்கு நடைபெற்ற வண்ணமிகு நிகழ்ச்சியில் பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மேக்ரோன் போட்டிகளை முறைப்படி தொடங்கி வைத்தார்.

தொடக்க விழா அணிவகுப்பில் இந்தியாவின் சார்பில் சுமித் அன்டிலும், பாக்யஸ்ரீ ஜாதவும் தேசியக் கொடியை ஏந்தி சென்றனர்.

அடுத்த மாதம் எட்டாம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியா சார்பில் 12 விளையாட்டுக்களில் மொத்தம் 84 வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

**[]<<<>>>[]**

நாடு முழுவதும் புதிய பண்பலை வானொலி அலைவரிசைகளை தொடங்குவதற்கான ஏலத்திற்கு மத்தி.ய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது முக்கியமான நடவடிக்கை என தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த நடவடிக்கை உள்ளூர் மொழிகளில் நிகழ்ச்சிகளை மேம்படுத்தும் எனவும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் என்றும் கூறியுள்ளார்.

முன்னதாக நேற்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 234 நகரங்கள் மற்றும் சிறு நகரங்களில் 730 பண்பலை அலைவரிசைகளைத் தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதில் தமிழகத்தில் குன்னூர், திண்டுக்கல், காரைக்குடி, கரூர், நாகர்கோவில், நெய்வேலி, புதுக்கோட்டை, ராஜபாளையம், தஞ்சாவூர், திருவண்ணமலை, வாணியம்பாடி ஆகிய 11 நகரங்களில் தலா மூன்று பண்பலை அலைவரிசைகளுக்கான ஏலத்துக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

**[]<<<>>>[]**

சட்டவிரோத பணப் பரிவர்த்தனை விவகாரத்தில் திமுக மக்களவை உறுப்பினர் திரு ஜெகத்ரட்சகனுக்கு 908 கோடி ரூபாயை அபராதமாக அமலாக்கத்துறை விதித்துள்ளது.

இதுகுறித்து அமலாக்கத் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கடந்த 2020-ஆம் ஆண்டு திரு ஜெகத்ரட்சகன் மற்றும் அவரது குடும்பத்தினர் தொடர்புடையை இடங்களில் சோதனை நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021-ம் ஆண்டில் சட்டவிரோத பணப்பரிமாற்ற தடுப்பு சட்டத்தின் கீழ், அவரது தரப்பில் பல்வேறு முதலீடுகள் செய்திருப்பதாக நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவின் பேரில் சட்டவிரோத பணப் பரிவர்த்தனையில் குற்றம்சாட்டப்பட்ட ஒவ்வொரு விதி மீறல்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் திரு ஜெகத்ரட்சகனின் 89 கோடியே 19 லட்சம் ரூபாய் மதிப்பிலான சொத்துகள் பறிமுதல் செய்யப்படுவதாகவும் அமலாக்கத்துறை கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

குரங்கு அம்மை நோய்க்கு சிகிச்சை அளிப்பது தொடர்பாக சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையைச் சேர்ந்த 200 மருத்துவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவில் இதுவரை குரங்கு அம்மை நோய் பாதிப்பு இல்லை என்று கூறினார்.

எனினும் சென்னை, மதுரை, திருச்சி, கோவை அரசு மருத்துவமனைகளில் 10 படுக்கைகள் கொண்ட சிறப்பு வார்டு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் டெங்கு பாதிப்பு கட்டுக்குள் உள்ளது என்றும், மழைக் காலத்தையொட்டி கொசு ஒழிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு மா சுப்பிரமணியன் கூறினார்,

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஒலி மாசைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு மெய்யநாதன் கூறியுள்ளார்.

பசுமை புத்தாய்வு திட்டத்தின் முதலாம் ஆண்டு விழா மற்றும் மஞ்சப்பை விருதுகள், பசுமை முதன்மையாளர்கள் விருதுகள் வழங்கும் விழா நேற்று சென்னையில் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு திட்டத்தின் மூலம் 25 சதவீதம் அளவுக்கு பிளாஸ்டிக் பைகள் பயன்பாடு குறைந்துள்ளது என்றார்.

ஒலி மாசைக் கட்டுப்படுத்த கண்காணிப்புப் பணிகள் தொடங்கப் பட்டுள்ளதாகவும் திரு மெய்யநாதன் தெரிவித்தார்.

*<u>( சவுண்ட்பைட் - மெய்யநாதன்) **-26----** செகண்ட்ஸ்</u>*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மின்சாரத் துறை சார்பில் நடைபெற்று வரும் சீரமைப்புப் பணிகளில் 88 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மின் சீரமைப்புப் பணிகள் தொடர்பாக தலைமை பொறியாளர்களுடன் அவர் ஆய்வு நடத்தினார்.

அப்போது பேசிய அவர், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பழுதடைந்த மற்றும் சாய்ந்த நிலையில் இருந்த மின்கம்பங்கள் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

88 சதவீத பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் மீதமுள்ள பணிகளை ஒரு மாதத்துக்குள் முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் திரு தங்கம் தென்னரசு அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

**[]<<<>>>[]**

தென்காசி மாவட்டம் சுரண்டை பகுதியில் நேற்று நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குத் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்த மூன்று பேரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அருங்காட்சியகங்களை மேம்படுத்த மாநில அரசு நடடிக்கை எடுத்து வருவதாக மாநில செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் கூறியுள்ளார்.

சென்னை தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, அருங்காட்சியகங்கள் துறை சார்பில் 'பண்பாடு - ஒரு மீள்பார்வை' என்ற கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கை தொடங்கி வைத்துப் பேசிய அமைச்சர் சென்னை தின கொண்டாட்டங்கள் கண்காட்சி வடிவிலும், கலை நிகழ்ச்சிகள் வடிவிலும் கருத்தரங்கு வடிவிலும் மூன்று வகையாக கொண்டாடப்பட்டு வருகின்றன என்றார்.

தஞ்சாவூரில் சோழர் அருங்காட்சியகமும், சென்னை சேப்பாக்கம் ஹுமாயூன் மகாலில் சுதந்திர தின அருங்காட்சியகமும் அமைக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சேலம், விருதுநகர் அருங்காட்சியகங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

ராமநாதபுரம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகங்களுக்கு சுமார் 5 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், வேலூர், கடலூர் அருங்காட்சியகங்களை விரிவுபடுத்தும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு மு பெ சாமிநாதன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ராக்கெட்டிலிருந்து செயற்கைக்கோளை பிரிக்கும் இலகுரக அதிநவீன தொழில்நுட்பம் குறித்த உரையாடல் நிகழ்ச்சிக்கு சென்னை வானொலியின் மாநில செய்திப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த ராக்கெட் விஞ்ஞானி கிளிண்டன் ஆண்டனியுடன் எமது செய்தியாளர் எஸ். ஜாய் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சி இன்று காலை மணி 8-30 முதல் 9-00 மணிவரை ஒலிபரப்பாகவுள்ளது.

பிரதான அலைவரிசையில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

**[]<<<>>>[]**

ரஷ்யாவில் கிரோவ் பகுதியில் உள்ள எண்ணெய்க் கிணறு மீது உக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் அந்த எண்ணெய்க் கிணறு கொழுந்து விட்டு எரிந்து வருகிறது.

**[]<<<>>>[]**

புதுதில்லியில் சட்ட அமைச்சகம் சார்பில் நடைபெற்ற அன்னையின் பெயரில் மரக்கன்று நடும் இயக்கத்தில் மத்திய சட்டத் துறை இணை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் பங்கேற்று மரக் கன்றுகளை நட்டார்.

**[]<<<>>>[]**

மத்திய கால்நடைப் பராமரிப்பு துறை சார்பில் கால்நடைகளுக்கான தொற்று நோய் தடுப்பு குறித்து மூன்று நாள் பயிலரங்கம் புதுதில்லியில் நேற்று தொடங்கியது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி, திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் இன்றும் நாளையும் மகளிருக்கான சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறும் என வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் நாளை மறுநாள் தனியார் வேலை வாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு சி. பழனி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தொழில்கடன் வழங்கும் முகாம் இன்று நடைபெறும் என மாவட்ட தொழில் மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தூத்துக்குடி மாவட்டத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், இ-ஷ்ரம் இணையதளத்தில் பதிவு செய்து, புதிய மின்னணு குடும்ப அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம் என ஆட்சியர் திரு இளம்பகவத் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

திருப்பத்தூரில் காவல்துறை சார்பில் பொது மக்கள் குறை தீர்க்கும் முகாம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி ஷ்ரேயா குப்தா தலைமையில் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

தேனி மாவட்டத்தில் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான சிறப்பு கல்விக்கடன் முகாம் நாளை நடைபெறும் என ஆட்சியர் திருமதி ஷஜீவனா கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சி சார்பில் செயல்படும் பள்ளிகளில் பிரெஞ்ச் மொழியை கற்பிப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், மாநகராட்சி நிர்வாகத்துக்கும் - அலையன்ஸ் பிரான்சைஸ் நிறுவனத்துக்கும் இடையே சென்னையில் நேற்று கையெழுத்தானது.

**[]<<<>>>[]**

சென்னையில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு விநாயகர் சிலைகளை வைத்து வழிபடும் பல்வேறு அமைப்பினருடனான கலந்தாய்வுக் கூட்டம், மாநகரக் காவல்துறை சார்பில் நேற்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் சென்னையில் வரும் 31-ஆம் தொடங்க திட்டமிடப்பட்டுள்ள ஃபார்முலா -4 கார் பந்தயத்திற்கான போட்டி அட்டவணையை மாநில அரசு வெளியிட்டுள்ளது.

பார்வையாளர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

இதனிடையே இந்த போட்டிக்குத் தடை விதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வருகிறது.

**[]<<<>>>[]**